விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 யாழ்ப்பாணம் | ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை | முஹரம் 10 | இதழ் 266 8-11-1981

சனிற்றறி வெயார்
(SANITARY WARE)
இறக்குமதி செய்த
கொமேட் — Commode
சிஸ்ரேன் மூடியுடன்
ரூபா 975/-ல் இருந்து
வாஷ்பேஷின்கள்
இணைப்புக்களுடன் ரூபா 475/-ல்
இருந்து
மாபிள்கள், S. LON பைப்புகளும்,
பீலிகளும் மற்றும் இணைப்புகளும்
கிடைக்கும்.
சமுத்ரா
ரேஸ்ட் லிமிட்.
23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7236 (1348)

## பாதிப்புற்றஆசிரியர்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறினர்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்டு சொந்த ஊர்களுக்குத் திரும்பிவந்த 135 ஆசிரியர்களும் தமக்கள் பிரச்னைகளை விசாரணைக்குழு முன் எடுத்துக் கூறினர்.

நேற்று நண்பகலுடன் விசாரணைகளை முடித்துக் கொண்ட இக்குழு கொழும்பு புறப்பட்டுச் சென்றது. [மா]

# யாழ். பொதுசனநூலகத்திற்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபா நூல்கள்

## யாழ். கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பு செய்ய யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் தீர்மானித்துள்ளது.

சிறந்த புத்தகங்களை தெரிவு செய்து கொள்வனவு செய்வதற்கு குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

யாழ்ப்பாண தென் இந்தியத் திருச்சபையின் பேராயர் பேரருட் திரு. டி. யே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் பொது நிர்வாக சபைக்கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக யாழ். பொதுநூலக குழுவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. [கரி-நி.

## 1981 மே மாதம் பலியான இளைஞர்களின் குடும்பங்களுக்கு நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)

1981 மே மாதம் யாழ்ப்பாணத்தில் அவசரகாலச் சட்டம் அமுலிலிருந்த போது பலியான 4 இளைஞர்களின் குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் நிதியுதவி அளித்துள்ளது. நான்கு குடும்பத்திற்கும் 24 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்

[6ம் பக்கம் பார்க்க]

## பரந்தன் தொழிற்சாலையில் கதவடைப்பு!

### 400 தொழிலாளர் பாதிப்பு 7பேர் மீது பொலிஸ் விசாரணை

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் கதவடைப்பு நிகழ்ந்துள்ளதைத் தொடர்ந்து நானூறு தொழிலாளர்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். அரசசார்பு தொழிற் சங்கத்தைச் சேர்ந்த சிலர் மட்டும் வேலைக்குச் செல்கின்றனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் அரசுசார்பு தவிர்ந்த நான்கு தொழிற்சங்க கூட்டணியைச் சேர்ந்தவர்கள்.

தொழிலாளர்கள், சில கோரிக்கைகளை முன்வைத்தனர் என்றும் இதனைத் தொடர்ந்து சட்டப்படி வேலை செய்தனர் என்றும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கதவடைப்பு ஐந்தாம் திகதி முதல் நீடிக்கிறது. இதற்கு முன்னர், பதினொருபேர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

எதிரணித் தொழிற் சங்கங்களைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் பொலீஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி சம்பந்தப்பட்ட நான்கு தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

## ரயிலில் கொள்ளையர் அட்டகாசம்!

### நால்வரை ராணுவத்தினர் மடக்கிப்பிடித்தனர்

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாணம் மெயில் வண்டியில் வியாங்கொடையில் நடந்த கொள்ளையின் போது இராணுவத்தினர் கொள்ளைக் கோஷ்டியினரை எதிர்த்து தாக்குதல் நடத்தி நால்வரை கைது செய்தனர்!

வியாங்கொடை ரயில் நிலையத்தை தாண்டி ரயில் ஓடிக்கொண்டிருந்த போது சுமார் 10 பேர் கொண்ட கொள்ளைக்கோஷ்டி பிரயாணிகளை தாக்கி அவர்களுடைய பொருட்களை யன்னலால் வெளியில் வீசிக் கொண்டிருந்தனர். சிலர் தாக்கப்பட்டனர்.

அப்பெட்டியில் பயணி

[6-ம் பக்கம் பார்க்க]

## டுபாயில் ஏமாறிய யாழ். இளைஞர்கள்

### வெறும் கடல்நீரை மட்டுமே 2 நாட்கள் பருகினராம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலை மோகம் ஏற்பட்டு அதன்எதிரொலியாக ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழந்து டுபாய் நாடு சென்ற இருபத்தேழு யாழ்ப்பாண இளைஞர்கள்: டுபாயில் அன்ன ஆகாரமின்றி வெறும் கடல் நீரை மட்டுமே அருந்தி நாற்பத்தெட்டு மணிநேரம் பட்டினி கிடந்து இலங்கை "ஏர் லங்கா" கருணையுடன் தாயகம் திரும்பி உள்ளனர்!

இது பற்றிக் கூறப்படுவதாவது:

"ஏஜன்ஸி" ஒருவரின் "மாயாஜால" வார்த்தைகளை நம்பி வெளிநாட்டு வேலையில் மோகம் கொண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முப்பத்தேழு இளைஞர்கள் ஐயாயிரம் ரூபா முதல் பதினையாயிரம் ரூபா வரை பணம் செலுத்தினார்கள். இவர்களில் சிலர் வெளிநாட்டு வேலையை நம்பி தங்கள் அரசாங்க உத்தியோகங்களையும் உதறித்தள்ளியவர்கள்.

[6ம் பக்கம் பார்க்க]

#### மானிப்பாயில் நடந்த 11 கொள்ளைகள்:

## தேநீர்கடை உரிமையாளரும் மற்றொருநபரும் றிமாண்டில்

### கொள்ளைப் பொருட்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் கடந்த சில நாட்களாக பட்டப்பகலில் 11 வீடுகளைக் கொள்ளையடித்த கொள்ளைக் கோஷ்டியினரை யாழ். பொலிஸைச் சேர்ந்த ஐ. பி ஸ்ரீதரன், எஸ். ஐ. இலங்கசிறி, திலான் துரை, இமானுவல், ஜேசுதாசன் ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டியினர் கொள்ளைப் பொருட்களுடன் மடக்கிப் பிடித்தனர்.

யாழ். நீதவான் திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான மானிப்பாய் ஆலடி தேநீர்க்கடை உரிமையாளர் சுப்பிரமணியம் செல்லையா, துரைராசா தவராசா (வயது 19) ஆகிய இருவரும் இதுவரை சுமார் 50,000 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துள்ளதாகவும் இவர்களை கொள்ளைப் பொருட்களுடன் தாம் கைது செய்துள்ளதாகவும் பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

கீழ்க்காணும் இடங்களில், சந்தேகநபர்கள் கொள்ளை, திருட்டு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றும் செல்லம்மணியின் வீடுடைத்து 1,300 ரூபா பெறுமதியான துணிவகை மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி

[6-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங்வெல்டிங், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி P. M. G. வகுப்புக்கள் ஆரம்பம் 14-11-81 இனைவரும் சேரலாம். நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம்
11, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்
140

### இன்று அமரர் ஜீ. ஜீ. நினைவு தினம்

# தமிழ் இனத்தின் விடுதலை விடிவெள்ளி!

நவம்பர் 8. இத்தினம் இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் இனத்தின் அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்நாள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ்க்குடி, தன்னை மறந்து தன்நிலையிழந்து எடுப்பார் கைப்பிள்ளையாக வாழ்வதைக் கண்டு மனம் வெதும்பி, "தமிழனென்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று சுலோகத்திற்கு உயிரூட்டி, உறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டிஎழுப்பி விடுதலைக்கு வித்திட்டு அதற்கென ஒரு தாயகத்தைக் கட்டி எழுப்பி, கொள்கை வகுத்து, கொடி எழுதி, கடந்த அரை நூற்றாண்டாக அவ்வினத்தை வழிநடத்திய தமிழன்னையின் தலைமகன் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பிறந்தநாள் இன்று. அன்னார் உயிர் வாழ்ந்திருப்பாரேயானால் அகவைகள் எண்பத்தை அடைந்திருப்பார்.

அன்னாரின் வாழ்க்கை வரலாறு தமிழ்ப்பேசும் மக்கள் அறியாததொன்றல்ல. வடமராட்சியிலுள்ள அல்வாயில், 1901-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதி தோன்றிய அமரர் ஜீ. ஜீ. தமது ஆரம்பக் கல்வியைக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பெற்று மாணவர் பராயத்திலே, மானிலத் தங்கப்பதக்கத்தைச் சொல் வல்லுனர் போட்டியில் தட்டிக்கொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் புகுந்தார். அங்கு முதல் மாணவனாகத் திகழ்ந்து, "வரோ.லொஜிகர் வைபோஸ்" என்ற புலமைப்பரிசிலைப்பெற்று இங்கிலாந்து சென்றார். அங்கு முதுமாணிப் பட்டத்துடன் "பாரிஸ்டரா" நாடு திரும்பிய அன்னார் தான் பெற்ற கல்வியின் பயனை தனக்காகத் தன் குடும்பத்திற்காக மட்டும் செலவிட்டாரல்ல. இளமைப் பராயத்தைச் சட்டத்துறையில் கழித்துவிட்டு, முதுமையில் புகழுக்காக அரசியலில் புகுந்தவரல்ல அமரர் ஜீ. ஜீ.

சட்டத்துறையில் புகழேணியில் ஏறிக்கொண்டிருந்த இளைஞன் ஜீ. ஜீ. வாழ்வில் புதுப்பாதை வகுத்தது கொழும்பில் 1928-ல் நடைபெற்ற ஒரு கூட்டம். சேர். பொன் இராமநாதனால் தமிழ்ப்பேசுமினத்தின் நலனுக்குச் சவக்குழி வெட்டவல்லது எனப் புறக்கணிக்கப்பட்ட டொனமூர் அரசியல் அமைப்பை ஏற்க வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கென அன்னார் நாட்டில் இல்லாதபோது கூட்டப்பட்ட கூட்டத்தில் "ஏற்கக் கூடாது" என்ற கருத்தினை முன்மொழிந்து தன் வாய்ச்சாதுரியத்தால் வந்தோரை எல்லாம் மருடிகேட்ட பாமியாக்கி இருந்ததை நிறைவேற்றி அரசியல் வாழ்வில் புகுந்தார் அமரர் ஜீ. ஜீ. அன்று முதல் அன்னார் கடாரத்தில் காலன் கைப்படும் கடைசி நிமிடம் வரை தமிழ்ப்பேசும் இனத்தின் நல்வாழ்வுக்காக, ஏற்றத்திற்காக அயராது உழைத்தார்.

1933 முதல் சட்டசபையில் பருத்தித்துறை தொகுதியின் பிரதிநிதியாகவிருந்து அரசியல் வாழ்வில் பெற்ற அனுபவமே அன்னாரைத் தமிழ்ப்பேசுமினத்தின் எதிர்காலத்தை சரியாக எடைபோடவைத்தது. அக்காலத்திலேயே சிங்கள அரசியல்வாதிகளின் எதிர்காலத்திட்டத்தினையும் அதனால் தமிழ்ப்பேசுமினத்திற்கு ஏற்படவுள்ள ஆபத்தையும் தீர்க்கதரிசனமாக உணர்ந்தார் அமரர் ஜீ. ஜீ. அதன் பயனாகவே அந்நியர் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கைமாற்றமுயலுகையில் அன்னாரிலும் முதியோர் தாமுண்டு தம் கறுப்புச் சட்டையுண்டு என வாழ்ந்த போது தமிழ் பேசுமினத்திற்கு இபக்கம் எதுவும் இல்லாத போது அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை உருவாக்கி "50க்கு 50 என்ற சமபலக் கோரிக்கையை முன்வைத்தார். அதற்காக பலமணிநேரம் சோல்பரி ஆணைக்குழுமுன் வாதிட்ட அன்னார் அதனைச் செயற்படுத்த சொந்தப்பணத்தில் இங்கிலாந்து சென்றார். ஆனால் சாபக் கேடுகளின் மொத்த உருவாகத் திகழும் தமிழினம் அவ் உரிமைபெற்று சிங்கள இனத்துடன் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு கொடுத்து வைக்கவில்லை.

**கே.ரி.எம். விஜயகுமார்**
[முன்னாள் செயலாளர் அ. இ. த. காங்கிரஸ் கொழும்புகிளை]

50-50 கோரிக்கை நிறைவேறாது நாடு திரும்பிய அமரர் ஜீ. ஜீ. அன்றைய அரசியல் நிலையை விளக்க இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் "போராட்டம் தோல்விகண்டுவிட்டது ஆனால் தலைவன் பிடிபடவில்லை" என்று கூறினார். அன்று முதல் அவர் தமிழ் பேசுமினம் நல்வாழ்வுவாழ பலதிட்டங்களை தீட்டி தன் தீர்க்கதரிசன முத்திரையைப் பொறித்தார் அன்றைய அரசியல் நிலையை வைத்து தமிழ் பேசும்மக்களின்எதிர்காலத்தை அவர்கள் காணப்போகும் அல்லலை மனதிற்கண்டு இங்கிலாந்தில் உள்ள குடியேற்ற நாட்டு மந்திரிக்கு "பெரும் பான்மையோரின் அரசை ஏற்கமாட்டோம்" என்று தந்திச் செய்தி அனுப்பினார்.

அத்துடன் அமைதி கண்டிலர் அதனைச் செயற்படுத்த தமிழ் பேசுமினம் விடுதலை பெற்றுத்திகழ பொருளாதாரம் அபிவிருத்தி முக்கியமென உணர்ந்து மொழியுரிமை இன உரிமையை விட்டுக்கொடாது எதிர்வினை ஒத்துழைப்பைமேற்கொண்டு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமியில் மூன்று பாரிய தொழிற்சாலைகளை அமைப்பித்து கொடுத்தார்.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் இலங்கைக் குடியுரிமைச்சட்டத்தைக்கொண்டு வந்த போது அதனை முழுமூச்சாக அமரர் ஜீ. ஜீ. எதிர்த்தார். 1948 பெப்பிரவரியில் நிறைவேற்றப்பட்ட இச்சட்டம், மலையகத் தமிழரின் தகப்பன், பாட்டன், பூட்டனின் வதிவிடத்தைக்கோரி அவர்களின் குடியுரிமையைப் பறிப்பதனை மூர்க்கமாகப் பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் எதிர்த்தார். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் தீர்மானத்திற்கமைய 1948-ல் 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக வாழ்ந்தவர்களுக்கு குடியுரிமை பெற்றுக்கொடுக்க முயன்றார் ஆயினும் பேச்சு வார்த்தை மூலம் 2948-ல் 7 ஆண்டுகள் தொடர்ச்சியாக வாழ்ந்த திருமணம் செய்தோருக்கும் 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக வாழ்ந்த திருமணமாகாதோருக்கும் குடியுரிமை வழங்கும் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தை வேறுவழியின்றி எதிர்காலத்தில் வரவிருக்கும் சட்டங்கள் படுமோசமாயிருக்கும் என்ற காரணத்தால் ஆதரித்தார்;

சமாதான வழி முறைகள் சாத்தியமில்லையாயின் தமிழினம் 'தன்விடுதலையை சுதந்திரமாகப்பெற என்ன வழி வகைகளைக் கையாள வேண்டும் என்பதனையும் அமரர் ஜீ. ஜீ. கோடிட்டுக்காட்டி வைக்கத் தவறவில்லை; ஐம்பதிற்கைம்பது கோரிக்கை வெற்றியளிக்கத் தவறியபொழுது "பெரும்பான்மையோரின் ஆட்சியை ஏற்க மாட்டோம்" என முதல் முழக்கமிட்ட அவர் தனிச்சிங்கள சட்ட மசோதா விவாதத்தில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கவை பார்த்து "திரு பண்டாரநாயக்கா அவர்களே நீங்கள் உங்கள் பெரும்பான்மையால் இச்சட்டத்தை நிறைவேற்றலாம் ஆனால் இது இந்நாட்டை இரு கூறாக்கும் ..." என்று கூறியதன் மூலம் தமிழின விடுதலையின் வழிகாட்டியானார் அவர் அக்கருத்தை மீண்டும் 1958 இனக்கலவரத்தை அடுத்து பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் "இந்நிலை தொடரின் தமிழ்மக்கள் சமஷ்டி அமைப்பையல்ல தனிநாட்டையே கோருவார்கள் என்று கூறினார்.

1964 டிசம்பர் மாதம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அங்கிருந்த திரு. சி. சுந்தரலிங்கத்தைச் சுட்டிக்காட்டி "சமாதானமுயற்சிகள் பலனளிக்கத்தவறின் நான் பேராசிரியரின் பின்னால் நின்று தனிநாட்டிற்காகப் போராடுவேன்" என்று ஏறத்தாழ இருபது ஆண்டுகளின் முன் பிரகடனம் செய்து தமிழனத்தின் விடுதலையின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். அன்னார் இன்றில்லை. ஆயினும் அவர்காட்டியபாதை தெளிவாகவுள்ளது.

## மக்கள் கருத்து

### இந்த வீதி திருந்துமா?

இணுவில் காரைக்கால் மயானவீதியில் வதியும் வாசிகளாகிய நாம் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றோம். புகையிரத வீதியிலிருந்து காரைக்கால் சிவன் கோவிலை அரவணைத்து காரைக்கால் மயானம் வரை இப்பாதை செல்கின்றது. இந்த வீதி சுமார் அரை மைல் தூரமுடையது. இங்கே மக்களின் தொகை அதிகமாகவுள்ளது. இவ்வீதியில் வாழும் மக்கள் சந்தைகளுக்கும், கோவில்களுக்கும், பாடசாலைகளுக்கும் செல்வதற்கு இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் இதன் நிலையோ மிகவும் மோசமாக இருக்கின்றது. பல வருடங்களாக இவ்வீதியில் பராமரிப்பு வேலைகளும், திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வீதியில் கிணற்றுச் சேற்றை கொட்டி மக்கள் நடமாடவே முடியாத நிலையில் இருக்கின்றது. இவ் வீதியிலே மழை வந்தால் போதும் வீதி ஒரே சேறுமயமாகக்காட்சி அளிக்கின்றது. இதனால் மக்கள் அவ்வீதியால் செல்லவோ அன்றி வாகனங்கள் செல்வதற்கோ வழியின்றித் தவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியினை திருத்தி அவ் வீதி மக்களின் துயர் துடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அ. கதிர்காமநாதன்,
இணுவில்.

---

### யாழ். பொதுசன நூலகம்:

# கொடித்தினம் மூலம் நிதி சேர்க்க முடிவு!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை நூல் நிலைய கமிட்டி யாழ்ப்பாணப் பொதுசன நூலக கட்டிடத்தை புனர் நிர்மாணம் செய்வதற்கான நிதியுதவிகளைப்பெறுவது சம்பந்தமாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் உயர் ஸ்தானிகராலயங்களுடன் தொடர்பு கொள்ளவிருக்கின்றது.

தமிழக அரசுக்கும் நிதி சேகரிப்பது சம்பந்தமான அறிக்கையை அனுப்பிவைத்து அங்கிருந்தும் நிதியுதவிகளைப்பெறத் தீர்மானித்துள்ளது அத்துடன் எதிர்வரும் டிசம்பர் மாத முதல்வாரத்தில் கொடிதினமொன்றை நடத்தியும் புனர்நிர்மானத்திற்கான நிதிசேகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# குடும்பத்திட்டத்தில் பயிற்சி பெறுகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்திட்ட பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணப் பிரிவிலிருந்து நான்கு வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டு மூன்று மாதப் பயிற்சியினைப் பெற்றுவருகிறார்கள்.

இவர்கள் ஏற்கனவே இரு வாரங்கள் கொழும்பில் தம் பயிற்சியை முடித்துக்கொண்டதின்பின் இப்பொழுது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் சமூக சௌக்கிய சேவைப் பகுதியினூடாக இப்பயிற்சிக்கு பின்வரும் நால்வருமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சி. ராஜேந்திரன், கொக்குவில் மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். சிவராமலிங்கம் பூநகரி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ரி. சிவரத்தினம் மற்றும் கண்டாவளை மத்திய மருந்தகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். குபேந்திரசிங்கம்.

### "தேசிய திட்டங்கள்மூலம்

# அபிவிருத்தித்துறையில் முன்னேற வேண்டும்"

(சாவகச்சேரி)

மீசாலைக்கு நல்லின ஆடுகள், கோழிக்குஞ்சுகள் என்பவற்றை வழங்கத் தீர்மானித்திருக்கின்றோம். இவற்றை இப்பகுதி மக்கள் சரியானமுறையில் பயன்படுத்தி அபிவிருத்தித் துறையில் முன்னேறவேண்டும்.

மீசாலை தென்கிழக்கு அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்திற் பேசும்போது கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எல். டீ. எச். ஜீவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஆ. தில்லைநடேசன் தலைமையில் மீசாலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜீவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: தனது கிராமத்திலுள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி உகந்தமுறையில் தொழிற்பட்டால் கிராம மக்கள் பொருளாதாரத்தில் தன்நிறைவு காணமுடியும்.

தென்மராட்சி மாதர் சம்மேளனத் தலைவி செல்வி கனோநிதி ரோஸ்மணி இராசரத்தினம் பேசுகையில் கூறியதாவது: சகலதுறைகளிலும் பெண்கள் முன்னேற்றமடைந்துவருவது எமக்குப் பெருமகிழ்ச்சிதருகின்றது.

ஒவ்வொரு நாடும் தேசமும் இன்று பொருளாதார நெருக்கடிகளில் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன.

தேசியத்திட்டங்களின் மூலம் அபிவிருத்தித் துறைகளில் முன்னேற ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

தலைவராக ஆ. தில்லைநடேசனும், செயலாளராக ஆ. வேலாயுதபிள்ளையும், பொருளாளராக சு. அருளானந்தசிவமும் தெரிவு செய்யப்பட்டனர். (ஏ)

## நோயாளிகள் கஷ்டம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் தொண்டை, மூக்கு, காது. பிரிவில் பணியாற்றிய வைத்திய நிபுணர் இடமாறிச் சென்றதினாலும், அந்த இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படாமையினாலும் இப்பகுதிக்கு வரும் நோயாளிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

தொண்டை, மூக்கு, காது பகுதிகளுக்கு நாளாந்தம்வரும் நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் பணிபுரியும் வைத்தியர்களிடமே தமது நோய்க்கு மருந்து பெற்றுச் செல்கின்றனர். (ஏ)

## பாணந்துறை நீதவான் இல்லத்திற்கு பாதுகாப்பு

(பாணந்துறை)

பாணந்துறை நீதவான் இல்லத்தை ஒரு கோஷ்டியினர் தாக்கிய தன் காரணமாக அவரது இல்லத்திற்குப் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

நீதவானின் வேண்டுகோளை அடுத்து இரவு வேளைகளில் இவரது வீட்டுக்குக் காவல் போடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்தியோரைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதன் பொருட்டு பொலிஸ் நாயும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது (ஐ)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 18-11-1981-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்" என குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப்பணம் இடாதோரின் கேள்விப் பத்திரம் எதுவித காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும், விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா. 2/-யும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ அல்லது தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பினைத்தால் கேள்வி விண்ணப்பப் பத்திரம் உரியவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

### வெற்றுச்சாக்கு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மா சாக்கு | — | 1091 |
| 2. | சீனிச் சாக்கு | — | 748 |
| 3. | அரிசிச் சாக்கு (நம்.2) | — | 1007 |
| 4. | நவதானியம் | — | 755 |
| 5. | மிளகாய்ச் சாக்கு | — | 34 |
| 6. | கழிவுச் சாக்கு | — | 70 |
| 7. | அரிசிச்சாக்கு (1அந்தர்) | — | 241 |
| 8. | உமிப்புல் பை | — | 54 |
| | | | 4000 |

பொதுமுகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

1401

## கண்தானம்

சென்னை, நவ 7

இலங்கை கண்வங்கி சென்னை கண்வங்கிக்கு இரண்டு கண்களைத் தானமாக வழங்கியுள்ளது. (கு)

இலங்கை கிரிக்கட் கோஷ்டிக்கு

## வெளிநாடுகள் அழைப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் கோஷ்டியைத் தமது நாட்டில் வந்து விளையாடுமாறு கரீபியன் கிரிக்கட்குழு கேட்டுள்ளது. இதன் பிரகாரம் இலங்கைக் கோஷ்டி சர்வதேச கிரிக்கட் கமிட்டியில் அங்கத்துவம் பெற்றபின்பு வெளிநாடொன்றில் விளையாடுவது இந்நாட்டிலேயே முதற்தடவையாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானும் இலங்கைக் கோஷ்டியைத் தங்கள் நாட்டில் வந்து விளையாடுமாறு அழைத்துள்ளது.

தற்போது இந்தியாவில் தனது சுற்றுப்பயணத்தை ஆரம்பித்திருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இங்கிலாந்து கோஷ்டியுடனேயே இலங்கை தனது முதலாவது டெஸ்டில் கிரிக்கட் பந்தயத்தினை ஆரம்பிக்கும். (ஐ)

## சவூதி அரேபியா தூதுக்குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

சவூதி அரேபியா தூதுக்குழு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளனர். இக்குழுவினர் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திபற்றி ஆராய்வர்.

இலங்கையில் ஒரு வாரகாலம் தங்கும் இத்தூதுக் குழுவினர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல், மகாவலி அபிவிருத்தி, காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா ஆகியோருடன் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடுவர்.

மகாவலி, கந்தளாய அபிவிருத்தி வேலைகளையும் பார்வையிடுவர். செப்டம்பர் மாதம் ஜனாதிபதி அவர்கள் சவூதி அரேபியா விஜயம் செய்தபோது விடுத்த அழைப்பிதனையடுத்தே இத்தூதுக் குழுவினர் இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளனர். (கு)

ஜேப்படி செய்தவர்களை

## மடக்கிப் பிடித்தவருக்கு பொலிசார் பாராட்டு!

(சாவகச்சேரி)

சாவகச்சேரிச் சந்தையில் பிக்பொக்கற் அடித்தவரும் அதை கைமாறிப் பெற்றவரும் மடக்கிப்பிடிக்கப்பட்டுச் சாவகச்சேரிப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

மீசாலை மூன்றுமுக் தபால் நிலைய அதிபர் எஸ். திக்கெம்பலம் என்பவரே குறித்த சந்தேக நபர்களான ஜோன் யோசேப், செல்லையா ஆகிய இருவரையும் மடக்கிப் பிடித்தார்.

சந்தேக நபர்களைச் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்னிலையில் குறித்த மூன்றுமுக் தபால் நிலைய அதிபர் ஒப்படைத்தார்; அவர்களிடமிருந்து 76 ரூபாவும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த வயோதிப காலத்திலும் துணிவுடன் மடக்கிப் பிடித்த உங்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். உங்களைப்போல் எல்லோரும் விழிப்பாக இருந்தால் பிக்பொக்கற்காரருக்கு இடமே கிடையாதென பொறுப்பதிகாரி திரு. கே. எம். ஏ. தென்னக்கோன் அவரைப் பாராட்டினார். (ஈ)

## அராலியில் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

அராலி சைவ இளைஞர் விளையாட்டு மைதானத்தில் வலி. மேற்கு பிரிவின் பயிற்சி நிலையம் விளையாட்டு அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ளது. நேற்றைய முன்தினம் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் வலி. மேற்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு க. அரிச்சந்திரா சகிதம் பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டார். அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தினரின் விளையாட்டுகளையிட்டு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி பாராட்டுத் தெரிவித்தார். (கு)

## தொழிற்சாலை பொருளுடன் பிடிபட்டாரம்

(மாவிட்டபுரம்)

சீமெந்துத்தொழிற்சாலைக்குச் சொந்தமான பொருளுடன் தொழிற்சாலை ஊழியர் ஒருவர் காங்கேசன்துறை பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான 450 ரூபா பெறுமதியான பைப் ஒன்றுடன் தொழிற்சாலை ஊழியரான சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகநாதன் சுருேந்திரன் என்பவர் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரைப் பொலிஸ் காவலில் வைத்து மேலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கருத்துவேறுபாடு

வாஷிங்டன், நவ. 6

மத்தியகிழக்கு ஒப்பந்த நாடுகள் தொடர்பாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்குக்கும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வைன்பேர்க்குக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.



# ரயில்பாதுகாவலர் மாணவர் கைகலப்பு

(கோண்டாவில்)

புகையிரதப் பாதுகாவலருக்கும் மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த கைகலப்பு காரணமாக கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு வந்த ரயில் வண்டி இரண்டு மணித்தியால தாமதத்தின் பின்னர் நிலையத்தை விட்டுப் புறப்பட்டது. இக்கைகலப்பு கொக்குவில் புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

இக்கைகலப்பில் புகையிரதப் பாதுகாவலர் தலையில் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதம் புறப்பட ஆயத்தமானதும் பல் தொழில் நுட்ப மாணவர்கள் சிலர் ரயிலில் ஏற முயன்ற போது புகையிரதப் பாதுகாவலர் அவர்களை ஏறவிடாமல் செய்ததாகவும் இதனைத்தொடர்ந்து கைகலப்பு மூண்டதாகவும் தெரியவருகிறது. இது சம்பந்தமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் விசாரணையைமேற்கொண்டு யாழ். பல் தொழில் நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

## கட்டுப்பாட்டு விலையை மீறினால் சிமெந்து பறிமுதல்!

(சண்டிலிப்பாய்)

சிமெந்து விலைக்கட்டுப்பாட்டை மீறி சில கடைகளில் கூடுதலான விலைக்கு விற்கப்படுவதாகவும், இவற்றை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் பறிமுதல் செய்யவிருப்பதாகவும் யாழ். உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு. ரி. மார்க்கண்டு தெரிவித்தார்

யாழ் மாவட்டத்தில் காலத்துக்குக்காலம் ஏற்படும் சிமெந்துத் தட்டுப்பாட்டைப் பயன்படுத்தி சில வியாபாரிகள் பெரும் தொகையாக சிமெந்து பதுக்கிவைத்து கள்ளச்சந்தையில் மிகவும் கூடுதலான விலைக்கு விற்று கொள்ளைலாபம் அடிக்கிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரிகளின், சிமெந்து பறிமுதல் செய்யப்பட்டு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரிய விலைக்கு பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும். அப்படிப்பட்ட வியாபாரிகள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தாயாருடன் மனஸ்தாபம்: மகன் ரயிலுக்குப் பலி!

(சாவகச்சேரி)

தாயாருடன் மனஸ்தாபமடைந்த மகன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.

நெல்லியடியைச் சேர்ந்த 19 வயது முகைப் முத்துராசாவின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் மரணவிசாரணை நடத்தினார்.

தாயாருடன் கோபித்துக் கொண்டு கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கருகே, இரவு மெயில் ரயில் முன் வீழ்ந்தாரென்றும், தலைவேறு உடல் வேறாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

வைத்திய அதிகாரி திரு.கே. சண்முகநாதன் பிரேத பரிசோதனை நடத்தினார். விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## வழமைபோல் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர சினிமாத் தியேட்டர்கள் யாவற்றிலும் நேற்று முதல் இரவு படக்காட்சி நடைபெற்று வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதச் சம்பவங்களையடுத்து தியேட்டர்களில் பகல் காட்சிகள் மட்டுமே நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 1981 மே ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய சங்க கூட்டத்தில் சங்க செயலாளர் அருட்திரு திரு வே. சர்வானந்தம் அடிகளார் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இக்கூட்டம் யாழ்ப்பாண தென்னிந்திய திருச்சபைபேராயர் பேரருட்திரு, டி. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

இப்பணம் யாழ்ப்பாணம் மேர்க்கன்டைல் வங்கியில் இருப்புச்செய்து அதற்கான பத்திரங்கள் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

(அரி. தி

## ரயிலில் கொள்ளையர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்த சிங்கள இளைஞரும் கொள்ளையரிடம் தமது சூட்கேசை பறிகொடுத்தார். அந்த இளைஞர் கொள்ளையரை எதிர்த்து போராடிய பின்னர் ரயில் உணவுச்சாலையிலிருந்த இராணுவத்தினரிடம் சென்று நிலைமையை தெரிவித்தார்.

உடனடியாக வந்த இராணுவத்தினர் கொள்ளைக் கோஷ்டியினரை தாக்கத் தொடங்கியதும் சிலர் ஓடும் யிலிலிருந்து குதித்து தப்பிக்கொண்டனர் இராணுவத்தினர் நால்வரை கைதுசெய்தனர்.

பிரயாணிகளில் அநேகர் தங்கள் பொருட்களையும் சூட்கேசுகளையும் இழந்த நிலையில் சென்றனர்.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலையின் நலன் விருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. பிரதம விருந்தினராக வட்டாரக் கல்வி அதிகாரி கலந்துகொண்டார்.

சில குறிப்புகள்: பாடசாலையின் மொத்தப்பிள்ளைகள் 213. ஆசிரியர் தொகை (5 பெண் 3 ஆண் எட்டு (அதிபர் உட்பட)

பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு முந்நூறு அழைப்பிதழ்கள் அச்சடிக்கப்பட்டு, மாணவர்கள் மூலமாகவும் நேரிலும் பெற்றோருக்கு வழங்கப்பட்டது. முயற்சிகள் இவ்வாறிருக்க கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் மொத்தத் தொகை என்ன தெரியுமா? பதினான்கு மட்டும் தான்! அதாவது ஆசிரியர்கள் (அதிபர் உட்பட) எட்டு. பெற்றோர் ஆறு!

ஊடுருவி

## டுபாயில்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

37 பேரில் 27 பேருக்கு முதல் வேலை கொடுப்பதாகவும் மிகுதி 10 பேரையும் பின்னர் கூட்டிச் செல்வதாகவும் அந்த ஏஜன்சி வாக்கு அளித்துவிட்டு கடந்த திங்கட்கிழமை இரண்டாம் திகதி 27 பேரையும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புறப்படத் தயாராகி நின்ற "எயர்லங்கா" விமானத்தில் ஏற்றிவிட்டு கடைசியில் தான் ஏறுவதாக அவர்களுக்குக் கூறினாராம்.

27 பேரும் விமானத்தில் ஏறிவிட்டனர்.

விமானம் டுபாய் விமான நிலையத்தில் இறங்கியதும் 27 இளைஞர்களும் இறங்கி நின்று தங்கள் "ஏஜன்ஜியைத்" தேடி அலைவித்தனராம்.

நீண்ட நேரத்தின் பின்னர் தான் அவர்களுக்கு தங்களுடன் குறிப்பிட்ட ஏஜன்சி வரவில்லை என்பது தெரியவந்ததாம்!

இது அவர்கள் மீது விழுந்த முதல் பேரிடி!

அடுத்த விமானத்தைப் பார்ப்போம் என்றிருந்த அவர்களுக்கு தங்களை வரவேற்க யாரும் டுபாய் விமானநிலையத்துக்கு வராதது அடுத்தபேரிடி!

அந்நாட்டில் குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் கடல் நீரைமட்டுமே இருநாட்களும் இவர்கள் உட்கொண்டனர்.

குடிக்கும் நன்னீர் வாங்கத்தான் எங்களிடம் அங்கு பணம் இருக்கவில்லையே" என்று இந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

விமான நிலையத்தில் சுற்றி வட்டமிட்ட இவர்களைக்கண்டு பரிதாபம் கொண்ட எயர்லங்கா நிறுவனத்தினர் உணவளித்து, ஒரு பத்திரத்தில் கையொப்பம் வாங்கி கொழும்பு கொண்டுவந்து விட்டனர்.

இவர்களைக் கூட்டிச்சென்ற அந்த ஏஜன்சி, விசா, பெர்மிட் என்பன இல்லாமலே இவர்களை கட்டுநாயக்கா விமான நிலையம் வரை அழைத்துச்சென்றாராம்.

இவர்களை ஏமாற்றிய ஏஜன்சி கொழும்பில் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏஜன்சியால் ஏமாற்றப்பட்ட 37 பேரும் தங்களது நகைகளையும், காணிபூமியையும், தண்ணீர் "பம்ப்" போன்றவற்றையும் விற்றும் அடகு வைத்தும்தான் பணம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள்.

(மா)

## தேநீர்கடை உரிமையாளரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் ஸ்ரீநிவாசக வெங்கடாச்சாரி வீட்டில் 9,00 ரூபா பெறுமதியான மேசை மணிக்கூடு, கைக்கடிகாரம், ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சுதுமலையைச் சேர்ந்த மகாலிங்கம் மகேந்திரம் வீட்டில் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளது.

### சேலைகள் திருட்டு

சரவணை அரியகுட்டி வீட்டில் 7,210 ரூபா பெறுமதியான சேலைகள் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளது.

எமிலியன்குள, செல்லத்துரை என்பவர் வீட்டில் 1500 ரூபா பெறுமதியான பொருள்கள் ரொக்கம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

க. தியாகராசா குருக்கள் வீட்டில் 735 ரூபா பெறுமதியான எவர்சில்வர் பாத்திரங்கள் திருடப்பட்டுள்ளது.

திருமதி கணபதி அதிர்ஷ்டாதேவி 2,350 பெறுமதியான உடுபிடவைகள் மற்றும் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சரஸ்வதி ராசநாயகம் வீட்டில் 3,750 ரூபா பெறுமதியான மணிக்கூடு மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

வைத்திலிங்கம்ராமேஸ்வரம் வீட்டில் 2,500 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது.

யாழ். நீதவான் திரு. சிறீ ஜோகநாதன் சந்தேகநபர்களை இம்மாதம் 20-ம் திகதிவரை நியாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கொள்ளையடித்த பொருள்களை மானிப்பாயைச் சேர்ந்தோர் அடையாளம் காட்டிப் பெற்றுச்சென்றனர்.

(சுண்டிக்குளி நிரு. -மா


# DIPLOMA COURSE IN ACCOUNTANCY (2 Years)

BY

THE CENTRE FOR DEVELOPMENT RESEARCH, EDUCATION AND COMMUNICATION

(Conceived by the late C. Loganathan)

Commences on the 12th December 1981

LOCATION: 2nd Floor, Maniams Building, 15, Sirambiady Lane, off Stanley Road, Jaffna.

Closing date for applications: 27-11-81

SPECIAL FEATURES OF THE COURSE

1. The syllabus for the Diploma Course will be a combination of the syllabus of the I. C. M. A. and A. C. A. (Chartered - Prelim) and shall include practical training consisting of case studies and work experience.
2. Library facilities with basic reference material will be provided in course of time.

For particulars, please apply to, with self addressed stamped envelope:

D. R. E. C.

C/o CONSULTANCY AND FINANCE AND DEVELOPMENT LIMITED,

129, Temple Road, Jaffna.



## RADIO OFFICERS (P. M. G.)

(April 82)

ஐந்து மாதப் பயிற்சி பொறியியளாளர்களால் நடாத்தப்படும்.

நவீன Rhythm முறையில் Morse code பயிற்சி அளிக்கப்படும்

இந்நிறுவனத்தில் வெல்டிங் (Arc & Gas)

வயறிங் (I E. E. முறைப்படி) பயிற்சிகளும் உண்டு.

NATIONAL INSTITUTES,

57, 59, பாங்சோல் வீதி. யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு நவம்பர் 8-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49, Jaffna. தொலைபேசி 7707, 889; 8126.